ந.க.எண்.4825/தமிழ் 1/2024

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
சென்னை – 600 008

நாள் :07.10.2024

**செய்திக் குறிப்பு**

தமிழினத்தலைவர் என்று உள்ளத்தின் மொழியால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த்திருப்பணிகளை போற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றித் தாய்த்தமிழுக்குத் தொண்டாற்றும் அறிஞர் ஒருவருக்கு ‘முத்தமிழறிஞர் கலைஞர் விருது ‘என்ற புதிய விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தகைமையும் பெருமையும் உடைய இவ்விருது பெறும் அறிஞருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், பொன்னாடை, தகுதியுரை ஆகியன வழங்கிச் சிறப்பிக்கப்பெறும் என 2024 – 2025ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2025ஆம் ஆண்டு 2ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்படும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகிய விருதுகளோடு புதிய விருதான **முத்தமிழறிஞர் கலைஞர் விருதையும் இணைந்து** வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றிய தகைமையும் தொண்டறமும் பூண்ட பெருமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

**http://awards.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொண்டு இணைய வழியாகவோ அல்லது **www.tamilvalarchithurai.tn.gov.in/awards** என்ற இணைய முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, அவற்றை நிறைவு செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழுமூர், சென்னை - 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக **30.10.2024** ஆம் நாளுக்குள் தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044- 28190412, 044 – 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (**30.10.2024**) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்